மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மொத்தத்தில் ரூ. 73,140க்காக ஒரு செயற்குறிப்பை இயக்குநர் அவர்கள் அரசுக்கு அளித்திருக்கிறார்கள். நிதி இலாகா அதிலே குறிப்பாக பணியாளர்களுக்கு கட்டடம் கட்டுவது, விசை ஏற்றத்துக்கான அறை, துளைக் கிணறு அமைப்பது, எம். எஸ். தொட்டி கட்டுவது ஆகியவைகளையெல்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை. அது இல்லாமல் இந்த நிலையத்தை அங்கே வைப்பது சாத்தியமாக இல்லை. எனவே அதை மீண்டும் நிதி இலாகாவிற்கு இந்தத் துறை இந்தக் கோரிக்கையை அனுப்பியிருக்கிறது. அது நிதி இலாகாவின் பரிசீலனையில் இருக்கிறது.

மாயூரம்-மணல்மேடு சாலை

*499 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம்-மணல்மேடு நெடுஞ்சாலையினை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு ப. உ. சண்முகம்: இல்லை.

மாயூரத்திலுள்ள ஆற்றுப்புறம்போக்கு நிலங்கள்

*500 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் காவிரி ஆற்றின் இரு பக்கங்களிலும் ஆற்றுப் புறம் போக்குகளில் ஆக்கிரமித்திருப்போரை அப்புறப்படுத்த அரசு மேற் கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாயூரம் நகரில் காவிரி ஆற்றின் இரு பக்கங்களிலும் ஆற்றுப் புறம்போக்குகளில் ஆக்கிரமிப்பு செய்திருப்போரை அகற்றுவதற்காக மாயூரம் கிளை பிரிவின் உதவிப் பொறியாளர் ஆக்கிரமிப்பாளர்களுக்கு நோட்டீசுகள் கொடுத்து ஆக்கிரமிப்பு அகற்றும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார். அத்துடன் அவர்களிடமிருந்து அபராதத் தொகைகளை வசூலிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளார்.

Reservation of production of sarees for Handlooms

*501 *Q.*—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether this Government have received any communication from the Centre during 1973 on the enforcement of the ban on production of coloured cotton sarees by Powerlooms; and

(*b*) if so, the details of the same?